©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 3.20 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 21] சென்னை, புதன்கிழமை, ஜூன் 2, 2010
வைகாசி 19, திருவள்ளுவர் ஆண்டு – 2041

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 165, சுற்றுச்சூழல் மற்றும் வன (வனம் 13)த் துறை, 30 நவம்பர் 2009.]*

தமிழ்நாடு 1882ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 35ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1968ஆம் ஆண்டு வெட்டுமரங்களை எடுத்துச் செல்வதற்கான விதிகளில் கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளைச் சேர்ந்த 2ஆம் விதியில் (3)ஆம் பகுதியில்,

(1) துணைப் பகுதிகள் (i) மற்றும் (k) விட்டுவிடப்பட வேண்டும்;

(2) துணைப்பகுதி (m)–க்குப் பின்னர், கீழ்க்காணும் துணைப்பகுதி சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

(n) **தனியார் நிலத்தில் வளர்ந்துள்ள கீழ்க்காணும் வெட்டுமரம்:–**

| *தொடர் எண்.* | *தாவரவியல் பெயர்.* | *தமிழ்ப் பெயர்.* | *வணிகப் பெயர்.* |
|---|---|---|---|
| (i) | அகாஸியா லேகோப்பியா | வெள்வேலன் | பல்பிரிவுக்கொத்து வெள்வேல் வெள்ளைப்பட்டை வெள்வேல் |
| (ii) | அய்லான்தஸ் எக்செல்சா | பைமரம், பைனார், பெருமரம் | மஹாருக் |
| (iii) | அல்பிஜியா லெப்பெக் | வாகை | கிழக்கிந்திய அக்ரோட்டு காய்கொக்கோ, சிரிஸ் |
| (iv) | அனகார்டியம் ஒக்ஸிடென்டேல் | முந்திரி | முந்திரி |
| (v) | ஆந்தோசெபாலஸ் கடம்பா | வெள்ளகடம்பு, கோலா, அய்யிலா | கடம் |
| (vi) | ஆர்டோகார்பஸ், ஹெட்டரோபைலஸ் | பலா | பலா |
| (vii) | ஆஸாத்ரேச்டா இண்டிகா | வேம்பு | வேம்பு, வேப்பமரம் |

| *தொடர் எண்.* | *தாவரவியல் பெயர்.* | *தமிழ்ப் பெயர்.* | *வணிகப் பெயர்.* |
|---|---|---|---|
| (viii) | பாம்பூஸ் (அனைத்து இனங்கள்) | மூங்கில் | மூங்கில் |
| (ix) | பாம்பாக்ஸ் செய்பா | இலவமரம், முள் இலவு, இலவு, மலை–இலவம் புலா | முள் இலவமரம், கபாக் |
| (x) | போராஸ்ஸஸ் ஃபிளாபெல்லிபர் | பனை, கரிம்பனை | பனை |
| (xi) | சீசல்பினியா சப்பான் | சபாங்குபடுங்கா | சப்பான் |
| (xii) | கேஸியா சியாமியா | பொன்னவரை, சின்னகொன்றை, மஞ்சக்கொன்றை, சீமை அவரை | பொன்னவரை |
| (xiii) | கேசுவரினா ஜங்குனியானா | சவுக்கு | சவுக்கு |
| (xiv) | செய்பாபென்டாண்ட்ரா | இலவம்பஞ்சு, உலகமரம், இலவு | இலவம்பஞ்சு மரம், கபாக் |
| (xv) | டால்பெர்ஜியா சிஸ்ஸீ | சிஸ்ஸீ, ஷிஷம் | சிஸ்ஸீ |
| (xvi) | எரித்ரினா (அனைத்து இனங்கள்) | மூர்க்கு, கல்யாணமுருங்கை | கோரல் மரம் |
| (xvii) | இகுளோபுலஸ் & இகிராண்டிஸ் நீங்கலாக யூகலிப்டஸ் (அனைத்து இனங்கள்) | தைலமரம் (கர்ப்பூர மரம் நீங்கலாக) | யூகலிப்டஸ் |
| (xviii) | மெலினா அர்போரியா | குமலன், குமில் கும்லா உமிதேக்கு, குமதி | கமாரி |
| (xix) | ஹெவே பிராஸிலியன்சிஸ் | ரப்பர் | ரப்பர் |
| (xx) | ஹைபிஸ்கஸ் டிலாசியஸ் | நீர் பருத்தி–ஆற்றுபூவரசு | சீஹைபிஸ்கஸ் |
| (xxi) | லூகானியா லூகோசெபாலா | நட்டசவுண்டால் | சுபாபுல், கூபாபுல் |
| (xxii) | மதுகா (அனைத்து இனங்கள்) | இலுப்பை | மோஹீவா |
| (xxiii) | மாங்கிபெரா இண்டிகா | மாமரம் | மா |
| (xxiv) | மெலியாஅஜேடாராச் | மலைவேம்பு, துருக்கவேம்பு | பெரிஸியன் லிலாக் |
| (xxv) | மெலியா டுபியா | மலைவேம்பு, மசவேப்பு | மலபார் வேம்பு |
| (xxvi) | மொரிண்டா டோமென்டோசா | நுணா, மஞ்சனாத்தி | மொரிண்டா, சுராஞ்சி சென்னையின் டாகரி மரம் |
| (xxvii) | பித்தெசெல்லோபியம் (அனைத்து இனங்கள்) | கொருக்காபுளி, கொடுக்காபுளி, | மணிலாபுளி |
| (xxviii) | பொகாமியா பின்னாட்டா | புங்கம் | இந்திய புங்கம், புங்கம் |
| (xxix) | சமானியா சாமன் | தூங்குமூஞ்சி மரம் | ரெயின் ட்ரீ |
| (xxx) | ஸ்வைடேனியா மேக்ரோபைலா | மஹோகனி | மஹோகனி |
| (xxxi) | ஸ்வைடேனியா மஹோகனி | மஹோகனி | மஹோகனி |
| (xxxii) | சைஜியம் (அனைத்து இனங்கள்) | நாவல் | இந்திய செர்ரி, ஜாமூன் |
| (xxxiii) | டாமரிண்டஸ் இண்டிகா | புளி, புளியன் | புளி |
| (xxxiv) | டெகோமாஸ்டேன்ஸ் | ஸ்வர்ணபட்டி | எஸ்பெரான்ஜா, இந்தியன் |
| (xxxv) | தெஸ்பேசியாபாபுலேனியா | பூவரசு | போர்ஷியா ட்ரீ, இந்தியன் டுலிப் |
| (xxxvi) | டுனா சிலியாட்டா | மலைவேம்பு, சந்தன வேம்பு, காரன்சுளி | டுன், ரெட்செடார் |

**தேபேந்திரநாத் சாரங்கி,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 184, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2)த் துறை, நாள்: 29 டிசம்பர் 2009.]*

1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 87ஆம் பிரிவு மற்றும் 112ஆம் பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் வரைவுத் திருத்தம், மேற்சொன்ன சட்டத்தின் 115ஆம் பிரிவில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, இதனால் வெளியிடப்படுகிறது.

2. மேற்சொன்ன வரைவுத் திருத்தம், இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று இதனால் அறிவிக்கப்படுகிறது. அது தொடர்பாக மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், யாதொரு நபரிடமிருந்து வரக்கூடிய ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும். மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருந்தால், அவற்றை சென்னை—600 005, சேப்பாக்கத்தில் உள்ள தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் மூலம் அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு இருபடிகளில் அனுப்பி வைக்க வேண்டும்.

### வரைவுத் திருத்தம்

மேற்சொன்ன விதிகளில், 95ஆம் விதியுடன் இணைக்கப்பட்டுள்ள விவர அட்டவணை (xxiv)இல் 10ஆம் பத்தியில், இனம் (1)—க்கு பின்னர், கீழ்க்காணும் இனங்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

அவையாவன:—

(m) இரசாயனப் பொருளைக் கலக்குகிற கொட்டகை மற்றும் இராசயனப் பொருள் நிரப்புகிற கொட்டகை ஆகியவற்றின் ஓசை பரவுதைத் தடுக்கும் அமைப்பின்மீது தாமிரத் தகடுகள் பொருத்தப்பட வேண்டும். அந்தக் கொட்டகைகளில் நுழைவதற்கு முன்னர் தொழிலாளர்கள், தங்களுடைய உடலிலிருந்து நிலைமின்னியல் ஆற்றலை வெளியேற்றுவதற்காகவும், விரும்பத்தகாத தீ விபத்து அல்லது வெடி விபத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் தங்களுடைய கைகளை தாமிரத் தகடுகளின் மீது வைக்க வேண்டும்.

(n) 55 வயதுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள், வெடி மருந்துப்பொருள் இல்லாத பகுதிகளில் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும்.

(o) நிறத்தைக் கண்டறிவதில் குறைபாட்டை அல்லது செவிப்புலன் குறைபாட்டைச் சரி செய்வதற்கான சாதனங்களுடன் அல்லது சாதனங்களைப் பயன்படுத்தாமல் பணிபுரிவதற்கு, முறையே தகுதிபெற்ற கண் மருத்துவர் மற்றும் காது, மூக்கு, தொண்டை மருத்துவர் ஆகியோரால் பரிசோதனை செய்யப்பட்டு தகுதியானவர் என்று அறிவிக்கப்பட்டாலன்றி மற்றபடி, 50 வயது மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதுடைய யாதொரு நபரும் பட்டாசு தயாரிப்பு தொழிற்சாலையில் பணியில் அமர்த்தப்படக்கூடாது. இத்தகைய பரிசோதனைகள், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறையாவது நடத்தப்பட வேண்டும். ஆய்வின்போது, ஆய்வாளர்கள் கேட்பதன் பேரில், மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அல்லது மறுபரிசோதனை பதிவுரு அளிக்கப்பட வேண்டும்.

(p) கலக்குகிற மற்றும் நிரப்புகிற வேலைகளுக்கு பெஞ்சுகள் மற்றும் மேசைகள் வகை செய்யப்பட வேண்டும்.

(q) உலர்த்துகிற நடைமேடையிலிருந்து 2 மீட்டருக்கு அப்பால், உலர்த்துகிற நடைமேடையைச் சுற்றி வெடிக்கத்தக்க சுவர் அமைக்கப்பட வேண்டும். வெடிக்கத்தக்க சுவரின் உயரம், உலர்த்துகிற நடைமேடையின் உயரத்தை விட ஒரு அடி அதிகம் இருக்க வேண்டும்.

(r) ஒவ்வொரு பட்டாசு தொழிற்சாலையிலும், குறைந்த அளவு பி.எஸ்.ஸி. (இரசாயனம்) அல்லது இரசாயனப் பொறியியலில் அல்லது அதற்குச் சமமான படிப்பில் பட்டயம் பெற்ற மேற்பார்வையாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். அவர், பட்டாசு தயாரிப்பு மற்றும் அதனுடன் இணைந்த அபாயங்கள் பற்றி முற்றிலும் அறிந்தவராக இருக்க வேண்டும். இந்த மேற்பார்வையாளர்கள் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் ஒப்புதலளித்த பட்டாசு பாதுகாப்பு குறித்த சிறப்பு பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும். ஒவ்வொரு 50 தொழிலாளருக்கும், ஒருவர் என்ற வீதத்தில் மேற்பார்வையாளர்களின் எண்ணிக்கை இருக்க வேண்டும். அத்தகைய மேற்பார்வையாளர்களின் மேற்பார்வையின்கீழ் பட்டாசுகள் தயாரிப்புப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

(s) நவீன மத்தாப்புகளைத் தயாரிக்கிற தொழிற்சாலைகள், கீழ்க்கண்டவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

(*i*) தனி வண்ணத் துகள்கள் இயந்திரக் கொட்டகை;

(*ii*) தனி வண்ணத் துகள்கள் உலர்த்தும் கொட்டகை; மற்றும்

(*iii*) வண்ணத் துகள்களை சேமித்து வைப்பதற்கான தனி சேமிப்பறை.

(t) யாதொரு பணிக்கொட்டகையில், ஒரே சமயத்தில், யாதொரு வகையைச் சேர்ந்த மத்தாப்புகளின் ஒன்றுக்கு மேற்பட்ட தயாரிப்பு நடவடிக்கை அனுமதிக்கப்படக்கூடாது அல்லது மேற்கொள்ளுமாறு கோரப்படக்கூடாது.

(u) கலக்குகிற மற்றும் நிரப்புகிற பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், மேனிலைக் கல்வித் தகுதியையாவது பெற்றிருக்க வேண்டும்.

(v) ராக்கெட்டுகள் மற்றும் பறக்கிற தன்மையுள்ள மத்தாப்புகளை உலர்த்துகிற நடைமேடையை நேரடிச் சூரிய ஒளியிலிருந்து பாதுகாப்பதற்காக, ஓசை பரவுவதைத் தடுப்பதற்கான அமைப்பின்மீது தாங்கியிருக்கிற வலுவான அலுமினிய வலையாலான தற்காலிக கூரை ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

(w) ஒவ்வொரு தொழிற்சாலையிலும் இரண்டு எரிகுழிகளாவது இருக்க வேண்டும். ஒவ்வொரு எரிகுழியும், பணிக்கொட்டகையிலிருந்து 62 மீட்டர் தொலைவில் இருக்க வேண்டும்.

(x) சேகரிக்கப்பட்ட கழிவுகள், அதே நாளன்று வேலைநேரம் முடிந்த பின்னர், முதலாள் முன்னிலையில், பயிற்சி பெற்ற தொழிலாளர் ஒருவரால், எரிகுழியில் அகற்றப்பட வேண்டும்.

(y) ஒவ்வொரு தொழிற்சாலையிலும் காற்று வீசுகிற திசையைக் காட்டுகிற சாதனம் அமைக்கப்பட வேண்டும்.

(z) பட்டாசுகள் தயாரிக்கப்படுகிற, கையாளப்படுகிற, சேமித்து வைக்கப்படுகிற அல்லது பயன்படுத்தப்படுகிற வளாகத்தில், செல்லிடத் தொலைபேசிகள், டிரான்சிஸ்டர்கள், முதலிய மின்னணுச் சாதனங்கள் எவையும் அனுமதிக்கப்படக்கூடாது.

(aa) கலக்கப்பட்ட இரசாயனங்கள் அதே நாளன்று பயன்படுத்தப்பட வேண்டும். யாதொரு வேலைநாள் முடிகிறபோது, கலக்கப்பட்ட உலர்ந்த அல்லது ஈரமான இரசாயனப் பொருள் (பட்டாசுகள்) எதுவும் தொழிற்சாலையில் வைக்கப்படக்கூடாது. அத்தகைய எஞ்சியுள்ள பொருள், வேலை நாள் முடிகிறபோது, பாதுகாப்பான முறையில் அழிக்கப்பட வேண்டும்.

(ab) சாதாரணமாக 250 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை பணியில் அமர்த்துகிற பட்டாசு தொழிற்சாலை, தமிழ்நாடு 2005ஆம் ஆண்டு பாதுகாப்பு அதிகாரி (அலுவல்கள், பொறுப்புகள் மற்றும் பணி நிலைமைகள்) விதிகளின்படி, 250 தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பு அதிகாரி என்ற வீதத்தில், தகுதிபெற்ற பாதுகாப்பு அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும்.

(ac) பட்டாசு தொழிற்சாலையில் மாலை 6 மணிக்கும், காலை 6 மணிக்கும் இடையே யாதொரு தயாரிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படக்கூடாது.

**டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

## அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 27, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2)த் துறை, நாள்: 22 பிப்ரவரி 2010.]*

1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 112ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1950ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் செய்யக் கருதியுள்ள, பின்வரும் வரைவுத் திருத்தங்கள், இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 115ஆம் பிரிவில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தைந்து ஐந்து நாட்கள் முடிவடைந்த பின்னர், இந்த வரைவுத் திருத்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும், வரப்பெறும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனுமிருப்பினும், அவற்றை, சென்னை—600 005, சேப்பாக்கத்திலுள்ள தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர் வாயிலாக, அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் வேலை வாய்ப்புத் துறை தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

## வரைவுத் திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்:—

(1) 4ஆம் விதியிலுள்ள ''விவர அட்டவணைக்குப்'' பதிலாக, பின்வரும் விவர அட்டவணை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

## “விவர அட்டவணை”

| நடமாடும் சாதனத்துடன் சேர்த்து நிறுவப்பட்ட மொத்த பரித்திறன். | அந்த ஆண்டில், ஏதேனுமொரு நாளில், பணியமர்த்தப்பட வேண்டியிருக்கின்ற நபர்களின் உயரளவு எண்ணிக்கை | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | 20 | 50 | 100 | 250 | 500 | 1000 | 2000 | 5000 | 10000 | 10000 |
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | (ரூபாயில் செலுத்தத்தக்க கட்டணம்) | | | | | | | | | | |
| பரித்திறன் ஏதுமில்லை | 600 | 1,200 | 1,800 | 2,400 | 5,400 | 8,100 | 18,000 | 27,000 | 49,500 | 72,000 | 90,000 |
| 10 பரித்திறனுக்கு மேற்பட்டு | 1,200 | 1,800 | 2,400 | 3,600 | 8,100 | 13,500 | 36,000 | 54,000 | 81,000 | 108,000 | 135,000 |
| 10 பரித்திறனுக்கு மேற்பட்டு 50 பரித்திறன் வரையில் | 1,800 | 2,400 | 3,600 | 5,400 | 13,500 | 21,600 | 54,000 | 81,000 | 108,000 | 135,000 | 162,000 |
| 50 பரித்திறனுக்கு மேற்பட்டு 129 பரித்திறன் வரையில் | 2,400 | 3,600 | 5,400 | 9,000 | 21,600 | 36,000 | 81,000 | 108,000 | 135,000 | 162,000 | 180,000 |
| 129 பரித்திறனுக்கு மேற்பட்டு 250 பரித்திறன் வரையில் | 3,600 | 5,400 | 9,000 | 14,400 | 36,000 | 54,000 | 108,000 | 135,000 | 162,000 | 180,000 | 198,000 |
| 250 பரித்திறனுக்கு மேற்பட்டு 500 பரித்திறன் வரையில் | 5,400 | 9,000 | 9,600 | 19,200 | 54,000 | 72,000 | 135,000 | 162,000 | 180,000 | 198,000 | 216,000 |
| 500 பரித்திறனுக்கு மேற்பட்டு 1,000 பரித்திறன் வரையில் | 9,000 | 9,600 | 19,200 | 36,000 | 72,000 | 90,000 | 162,000 | 180,000 | 198,000 | 216,000 | 234,000 |
| 1000 பரித்திறனுக்கு மேற்பட்டு 2,000 பரித்திறன் வரையில் | 9,600 | 19,200 | 36,000 | 48,000 | 90,000 | 108,000 | 180,000 | 198,000 | 216,000 | 234,000 | 252,000 |
| 2,000 பரித்திறனுக்கு மேற்பட்டு 5,000 பரித்திறன் வரையில் | 19,200 | 36,000 | 48,000 | 60,000 | 108,000 | 126,000 | 198,000 | 216,000 | 234,000 | 252,000 | 270,000 |
| 5,000 பரித்திறனுக்கு மேற்பட்டு 7,500 பரித்திறன் வரையில் | 36,000 | 48,000 | 60,000 | 72,000 | 126,000 | 144,000 | 216,000 | 234,000 | 252,000 | 270,000 | 288,000 |
| 7,500 பரித்திறனுக்கு மேற்பட்டு 10,000 பரித்திறன் வரையில் | 48,000 | 60,000 | 72,000 | 84,000 | 144,000 | 162,000 | 234,000 | 252,000 | 270,000 | 288,000 | 306,000 |
| 10,000 பரித்திறனுக்கு மேற்பட்டு | 60,000 | 72,000 | 84,000 | 96,000 | 162,000 | 180,000 | 252,000 | 270,000 | 288,000 | 306,000 | 324,000 |

(2) 56—B விதியில் (2) துணை விதிக்குப் பதிலாக பின்வரும் துணை விதி சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்,

அதாவது,—

"(2). அழுத்தம் கொண்ட தளவாடம் அல்லது கொள்கலன் அல்லது நீரால் மூடி முத்திரையிடப்பட்ட வாயு கொண்ட சாதனத்தை ஆராய்ந்து சோதனையிடுவதற்கு செலுத்தத்தக்க கட்டணம் பின்வருமாறு இருக்க வேண்டும்:—

(i) வெளிப்புற ஆய்விற்கு, தளவாடம் அல்லது கொள்கலனின் அளவு அல்லது கொள்திறனை பொருட்படுத்தாமல், தளவாடம் அல்லது கொள்கலன் ஒன்றுக்கு ரூ.400 (ரூபாய் நானூறு மட்டும்)

(ii) நீர்மநிலையில் சோதனைக்கு 4 Kgf/sq-cm (g) வரையில் கொண்டுள்ள தளவாடம் அல்லது கொள்கலன் ஒன்றுக்கு ரூ. 1000—(ரூபாய் ஆயிரம் மட்டும்)

(iii) நீர்மநிலையில் சோதனைக்கு, 4 Kgf/sq-cm (g) மேற்பட்ட அளவிலான தளவாடம் அல்லது கொள்கலன் ஒன்றுக்கு ரூ. 2000—(ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)

(iv) உட்புற ஆய்விற்கு, தளவாடம் அல்லது கொள்கலனின் அளவு அல்லது கொள்திறனை பொருட்படுத்தாமல், தளவாடம் அல்லது கொள்கலன் ஒன்றுக்கு ரூ.1000— (ரூபாய் ஆயிரம் மட்டும்); மற்றும்

(v) அழியத்தகாத அதிவேக ஒலி அலைவரிசை (அல்ட்ராசானிக்) கனத்தினை அளவீடு செய்கின்ற சோதனைக்காக, தளவாடம் அல்லது கொள்கலனின் அளவு அல்லது கொள்திறனை பொருட்படுத்தாமல், தளவாடம் அல்லது கொள்கலன் ஒன்றுக்கு ரூ. 4,000— (ரூபாய் நான்காயிரம் மட்டும்)

(3) விதி 67—A இல், பகுதி (iv) இன் (a) துணைப்பகுதியில் "ரூ. 50/— (ரூபாய் ஐம்பது மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ. 100/— (ரூபாய் நூறு மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(4) 86—A ஆம் விதியின் (b) துணைவிதியில் "ரூ. 50/— (ரூபாய் ஐம்பது மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ. 100/— (ரூபாய் நூறு மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்; மற்றும்

(5) 95 ஆம் விதியின் (1—A) துணை விதியைச் சேர்ந்த (a) பகுதியில் "ரூ. 50/— (ரூபாய் ஐம்பது மட்டும்)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ரூ. 100/— (ரூபாய் நூறு மட்டும்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

## அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 13, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (H2)த் துறை, நாள்: 12 பிப்ரவரி 2010.]*

1986ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 68/1986) 30ஆம் பிவிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1988ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

## திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்—

(1) 6—Aஆம் விதிக்குப் பின்னர், பின்வரும் விதி சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

"6—B மாநில ஆணையத்திலுள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை:— மாநில ஆணையத்தில் இரண்டு உறுப்பினர்களுக்கு குறையாமலும் நான்கு உறுப்பினர்களுக்கு மிகாமலும் அவர்களுள் ஒருவர் பெண் உறுப்பினராகவும் இருக்க வேண்டும்.".

(2). 7ஆம் விதியின் (1) துணை விதியில், பின்வரும் வரம்பு நிபந்தனை சேர்க்கப்படவேண்டும்,

அதாவது:—

''ஆனால், முழுநேர, அடிப்படையில் நியமிக்கப்பட்ட நீதித் துறை சார்ந்த உறுப்பினர்கள், அவர்கள் பணியிலிருந்தபோது கடைசியாக பெற்ற சம்பளத்திலிருந்து ஓய்வூதியம் கழிக்கப்பட்ட தொகையினை ஊதியமாக பெறுவதற்கு தகுதியுடையவராகிறார்கள்.

***கே. சண்முகம்,***
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.